**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234/2016**

**Deposition of P.W. 8**

Name : திரு. அருள் சத்தியா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 30.04.2025**

Accused Present.

முதல் விசாரணை-

நான் தற்போது திருவாவூர் மாவட்டம் நில எடுப்பு மற்றும் நெடுங்சாலை திட்டங்கள் துறையில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) ஆக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் கன்னியாகுமரி மாவட்டம் பத்மனாபபுரம் கோட்டாட்சியராக பணியாற்றிய போது கல்குளம் வட்டம், வேளி மலை கிராமம் புல எண்.3/4பி–யில் நில உரிமையாளா திருமதி. சினேகாஅஜய் க/பெ. (லேட்) அஜய் ராஜ் என்பவர் அந்த புல எண்ணில் சட்ட விலோதமாக எவ்வித அரசு அனுமதியும் இன்றி குவாரி பணி மேற்கொள்ளப்பட்டு உடை கற்கள் வெளியேற்ற பட்டதாக பெறப்பட்டபுகாரின் அடிப்படையில் 13.09.2012ம் தேதி கன்னியாகுமரி மாவட்ட துணை இயக்குனர் ( புவியியல் மற்றும் சுரங்கம்), கல்குளம் வட்டாட்சியர், நில அளவர், வேளி மலை கிராம நிர்வாக அலுவலகர் ஆகியோர்கள் கூட்டு புலதணிக்கை மேற்கொண்டனர். அத்தணிக்கையில் 44,000 கன மீட்டர் அல்லது 14667யூனிட்டுகள் கற்கள் எவ்விதஅரசு

அனுமதியும் இன்றி சட்ட விரோதமாக குவாரி செய்து வெளியேற்றப்பட்டதாக அறிககை பெறப்பட்டது. மேலும் 18.10.2012 அன்று வேளிமலை கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றினை அளித்தார். அப்புகார் மனுவினை பெற்றுக்கொண்டு கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை 220/2012 ஆக பிரிவுகள் 4 (1) மற்றும் 21 கனிமமும், சுரங்கமும் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 1957 மற்றும் பிரிவு 3 தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்ட பிரிவு படி வழக்கு பதிவு செய்தார். மேலும் 07.11.2012ம் தேதிய கடிதத்தில் கன்னியாகுமரி மாவட்ட துணை இயக்குனர் (புவியியல் மற்றும் சுரங்கம்) அவர்கள் மேற்படி கல்குளம் வட்டம், வேளிமலை கிராமம் திருமதி. சினேகா அஜய் அவர்களுக்கு சொந்தமான புல எண். 3/4பி–யில் 14667 யூனிட்டுகள் கற்கள் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக வெட்டி எடுக்கப்பட்ட குற்றமானது தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959 உட்பிரிவு 36ஏ–ன் படி அபராதம் விதிக்கக்கூடிய செயல் என்பதால் மேற்படி நில உரிமையாளருக்கு வெட்டி எடுக்கப்பட்ட கற்களுக்கான அபராத தொகை, கனிமத்தின் மதிப்பீடு மற்றும் சீனியரேஜ் ஆகியவற்றை வசூலித்து நடவடிக்கை எடுக்குமாறு 07.11.2012ம் தேதியிட்ட கடிதத்தில் பத்மனாபபுரம் கோட்டாட்சியர் ஆகிய எனக்கு அறிக்கை சமர்பித்தார். அந்த அறிக்கையின் அடிப்படையில் நில உரிமையாளர் சினேகா அஜய் அவர்களுக்கு விளக்கம் கேட்கும் குறிப்பாணை ஒன்றை கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது. அதற்கு எழுத்து பூர்வமாக நில உரிமையாளர் விளக்கம் அளித்தார். அந்த விளக்கம் ஏற்றுக்கொளும்படியாக இல்லாத காரணத்தினால் கனிமமும், சுரங்கமும் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 1957 உட்பிரிவு 4

(1) , 4, 1 ஏ , 21 மற்றும் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் உட்பிரிவு 36 ஏ–ன் படி ஒட்டுமொத்தமாக ரூ.98,51,890/– அபராத தொகை விதித்து சினேகா அஜய் அவர்கள் மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு அ.சா.ஆ.4. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்,

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்மந்தப்பட்ட நிலத்தை அதிகாரிகள் பார்வையிட்டு தணிக்கை செய்யும் போது நான் அந்த இடத்தில் இல்லை. சம்மந்தப்பட்ட புல எண்.3/4பி ஆனது எதிரியின் கணவர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். அது எந்த தேதி எதிரியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அந்த இடமும், பாறையும் எதிரி பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை என்றால் எனக்குத் தெரியாது. பாறை வெட்டி எடுக்க அனுமதி இருந்த போது எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்பது பற்றிய அளவு எங்கள் அலுவலகத்தில் இருக்காது புவியியல் மற்றும் சுரங்கதுறை அலுவலகத்தில் இருக்கும். பாறை வெளியேற்றுவதற்கான நடைசீட்டும், துணை இயக்குனர் அலுவலகத்தில் இருக்கும். கடைசியாக நடைசீட்டு மற்றும் வெட்டி எடுக்கப்பட்ட பாறைகளின் அளவு குறித்து ஆவணங்கள் இருந்தது என்பது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி விபரங்களை நான் ஆய்வு செய்யவில்லை. தணிக்கை செய்த போது அது குறித்த அறிக்கை எனது அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. அந்த அறிக்கையை நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அப்படி ஒரு அறிக்கை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. தணிக்கை செய்த பிறகு நான் அந்த நிலத்தை பார்வையிடவில்லை. நான் சொன்னது போல் அந்த இடத்தில் கற்கள் எதுவும் வெட்டி எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நிலத்தை தணிக்கை செய்யும்போது

பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு விளக்கம் கேட்கும் கடிதம் அனுப்பியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு நான் போனேன். நான் அறிக்கை எதுவும் காவல்துறைக்கு கொடுக்கவில்லை. வெட்டி எடுக்கப்பட்ட கற்களின் அளவு மற்றும் எதிரிக்கு விதிக்கப்பட்ட அபராதம் ஆகியவை முறையானவை அல்ல என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அதிகாரி எனக்கு முறையாக அறிக்கை சமர்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை முறையாக பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயம் நிலமும், பாறையும் எதிரிக்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. எதிரியின் கணவருக்கு தான் பாறை உடைக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. எவ்வளவு காலம் அந்த அனுமதி இருந்தது என்பது பற்றி எனக்குத் தெரியாது. அ.சா.4 உத்தரவின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.